**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No. 1/2022 In O.S.No. 202/2017**

1) சண்முகம்

2) விஜயலட்சுமி

3) மணிமேகலை

4) பாலசுப்பிரமணி

5) தங்கவேலு

.....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1) ராஜீ (எ) சுப்பிரமணியன்

2) துளசி

3) துரைசெட்டியார் (இறப்பு)

4) செந்தில்குமார்

5) சிவானந்தம்

6) திருவேங்கடம்

7) அருண் (எ) அருண்குமார் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 01.12.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகவும், 2 , 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள், 1 மற்றும் 2 புரபோஸ்டு பார்ட்டிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

இறந்து போன 3 ம் பிரதிவதிக்கு உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்க மனுபோடாத காரணத்தால் ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து

இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென பரிகாரம் கோரி காலவரையரைச்சட்டம் பிரிவு 5 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

1. மனுதாரர் மனுவில் 1ம் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் வாதி. மனுதாரரும் மற்ற மனுதாரர்களும் பிரதிவாதிகள் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் 16.09.2019 ம் தேதி இறந்துவிட்டார். இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்கள் வாரிசுகள். மேற்படி இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு 09.12.2019 ம் தேதிக்குள் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். மேற்படி 3ம் பிரதிவாதி இறந்து போன விவரம் தற்போது தான் தெரியவந்தது என்றும், கொரோனா நோய் தொற்று காரணமாகவும், மனுதாரரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் மனுதாரரால் 3ம் பிரதிவாதி இறந்த விவரத்தை உடன்காலில் தெரிவிக்க முடியவில்லை. மேலும் 3ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் உரிய காலத்தில் சேர்க்காத காரணத்தால் அவரைப் பொருத்து Abatement ஆகிவிட்டது. மேற்படி Abatement ரத்து செய்ய 09.02.2022 ம் தேதிக்குள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். இறந்து போன 3ம் பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரது வாரிசுகள் பற்றிய விபரம் தற்போது தான் தெரியவந்த காரணத்தால் உரிய காலத்தில் மனுதாரர்களால் வாரிசு சேர்க்க மனு போட இயலாமல் போய்விட்டது. எனவே மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரை ஆட்சேபனையின் சுருக்கம்</u>**

2. மனுதாரர்களின் மனு நிலைக்கத்தக்கதல்ல. 3ம் பிரதிவாதி 10.09.2019 ம் தேதி இறந்து விட்டதாக தெரிகிறது என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் 3ம் பிரதிவாதி இறந்து போன விபரத்தை தெரிந்து கொண்டு 3 ஆண்டுகாலமாக வாரிசுகள் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி மனுதாரர்களின் இந்த

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் 16.09.2019ம் தேதி இறந்துவிட்டார். இறந்து போன 3ம் பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரது வாரிசுகள் பற்றிய விபரம் தற்போது தான் தெரியவந்த காரணத்தால் உரிய காலத்தில் மனுதாரர்களால் வாரிசு சேர்க்க மனு போட இயலாமல் போய்விட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள், மனுதாரர்கள் 3ம் பிரதிவாதி இறந்து போன விபரத்தை தெரிந்து கொண்டு 3 ஆண்டுகாலமாக வாரிசுகள் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. 3ம் பிரதிவாதி இறந்து போன விவரம் தற்போது தான் தெரியவந்தது என்றும், கொரோனா நோய் தொற்று காரணமாகவும், மனுதாரரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் மனுதாரரால் 3ம் பிரதிவாதி இறந்த விவரத்தை உடன்காலில் தெரிவிக்க முடியவில்லை எனவே உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு வழக்கில் இரு தரப்பிற்கும் உரிய வாய்ப்பு கொடுத்து தீர்ப்பு பகரப்பட்டால் மட்டுமே அந்த வழக்கானது உண்மையான இறுதி நிலையை எட்டும். மேலும் மனுதாரருக்கு 3ம் பிரதிவாதியின் இறப்பு மற்றும் வாரிசுகள் பற்றிய விபரம் தற்போது தான் தெரிந்த காரணத்தினால் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை 778 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது என மனுதாரர் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது.

மேற்படி மனுவை அனுமதிப்பது எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்கும் விதமாகவும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-P.பாலமுருகன்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/-P.பாலமுருகன்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**